भारत सरकार GOVERNMENT OF INDIA · शिक्षा मंत्रालय MINISTRY OF EDUCATION

காசி தமிழ்ச் சங்கமம் 5.0 · திருக்குறள் பயில்வோம்

# நாள்தோறும் பன்னிரு குறள்கள்

திருக்குறள் · Thirukkural · Thiruvalluvar

---

391 கல்வி · Learning

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.**

கற்கப்படும் நூல்களை ஒருவன் பழுதில்லாமல் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றதால் அக்கல்விக்கேற்ப, அந்நூல்கள் சொல்லுகின்ற நெறியில் நடத்தல் வேண்டும்.

423 அறிவுடைமை · The Possession of Knowledge

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

எப்பொருளை யார் சொல்லக்கேட்டாலும் அப்பொருளின் உண்மையான பயனைக் காணவல்லது அறிவாகும்.

291 வாய்மை · Veracity

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.**

வாய்மையென்று சொல்லப்படுவது எதுவென்றால், அது பிறவுயிர்களுக்குத் தீங்கு சிறிதும் செய்யாத சொற்களைச் சொல்லுதல்.

108 செய்ந்நன்றியறிதல் · Gratitude

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.**

பிறர் முன்பு செய்த நன்மையை மறப்பது ஒருவனுக்கு அறமாகாது; அவர் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறமாகும்.

152 பொறையுடைமை · The Possession of Patience, Forbearance

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.**

பிறர்செய்த மிகையான தீமையைப் பழிதீர்க்கமுடிந்த காலத்தும் பொறுத்தல் வேண்டும். அத்தீமையை உள்ளத்தில் கொள்ளாது மறந்துவிடல் பொறுத்தலினும் நன்றாம்.

100 இனியவை கூறல் · The Utterance of Pleasant Words

**இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

இனிய சொற்கள் தன்னிடமிருக்க அவற்றைப் பேசாது, இனிமையற்ற சொற்களைப் பேசுதல், இனிய கனிகள் தன்னிடம் இருக்கும்போது அவற்றை உண்ணாமல், இனிமையற்ற காய்களை உண்ணுவது போலாகும்.

211 ஒப்புரவறிதல் · Duty to Society

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு.**

தமக்கு நீர் அளிக்கும் மழைக்கு உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன? ஏதும் செய்வதில்லை. அம்மழைபோன்றார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு கருதுவன அல்ல.

991 பண்புடைமை · Courtesy

**எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

யாவரிடமும் எளிய செவ்வியரானால், பண்புடைமையென்னும் நன்னெறியில் ஒழுகுதல் எளிதென்று நூலோர் கூறுவர்.

611 ஆள்வினை உடைமை · Manly Effort

**அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.**

நாம் இச்செயலைச் செய்துமுடித்தல் அருமை உடையதென்று எண்ணி ஒருவன் மனம் தளர்தல் கூடாது; அதனை முடித்தலுக்கேற்ற பெருமையைத் தன் முயற்சி உண்டாக்கும்.

621 இடுக்கண் அழியாமை · Hopefulness in Trouble

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்.**

ஒருவனது செயலால் தனக்கு இடுக்கண் வரும்போது அதற்கு அஞ்சாது உள்ளம் மகிழ்தல் வேண்டும்; அவ்விடுக்கணைத் தள்ளி மேலும் மேலும் ஒருவனுக்கு ஆற்றலைத் தரவல்லது அம்மகிழ்ச்சியைத்தவிர வேறில்லை.

945 மருந்து · Medicine

**மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.**

உடலுக்கும், காலத்திற்கும், சுவைக்கும் ஏற்ற உணவை விருப்பம்போல் அல்லாமல் நோய்வராத அளவு ஒருவன் உண்பானாயின் அவனது உயிர்க்குப் பிணிகளால் துன்பம் நேராது.

972 பெருமை · Greatness

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.**

எல்லா உயிர்களும் பிறப்பால் ஒத்தவை; அவை செய்யும் தொழில்களின் வேறுபாட்டால் சிறப்பு ஒவ்வாததாகும்.

---

**காசி தமிழ்ச் சங்கமம் 5.0** · திருக்குறள் பயில்வோம்
கல்வி அமைச்சகம், இந்திய அரசு
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (CICT), சென்னை
மொழிபெயர்ப்புகள் © செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை · CC BY 4.0

kts.cict.in